சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 07.03.2026
வா.சா.1 – அப்துல் ராஜா முகமது S/o சிக்கந்தர்
O.S. No.307/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரதிவாதி வெள்ளைச்சாமி எங்களுடைய இடத்தில் வந்து தகராறுசெய்கிறார். அதை தடை செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை யார் கூறினார்கள் என்றால் நான் தான் கூறினேன். வழக்கு சொத்து வஞ்சிநகரம் கிராமம் சர்வே எண்.181/11A, 86-1/2 செண்டு ஆகும். வழக்கு சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்வதற்கு ஆதரவாக வரி ரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேன். தாவூத் பீவி என்பவர் எனது உறவினர் ஆவார். மேற்படி தாவூத் பீவியிடம் இருநிது தான் வழக்கு சொத்தை கடந்த 02.09.2022 ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 31.10.2022 அன்று பீர்முகமது என்ற நபரிடம் வழக்கு சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தை பற்றி வழக்கில் நான் சொல்லியிருக்கிறேனா என்றால் அப்போது ஒப்பந்தம் போடவில்லை என்பதால் சொல்லவில்லை. வழக்கு சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் போட்ட பீர்முகமதை இந்த வழககில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் வழக்கிற்கும் அவருக்கும் எந்த சம்பந்தம் இல்லை. நான் கிரையம் பெறுவதற்கு முன்பாக வழக்கு சொத்திற்கு அருகில் இருக்கும் நபர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரித்தேன். வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்று சுமார் 1- ½ மாதம் கழித்து பிரதிவாதி என்னிடம் பிரச்சினை செய்தார். பிரதிவாதி வழக்கு சொத்தில் உழவடை

பாத்தியம் வைத்திருக்கிறார் என்றும் அவரை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவூத் பீவியுடன் சேர்ந்து கொண்டு நான் வழக்கு சொத்தை கிரையம் பெற்று அவரை வெளியேற்ற முற்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.07 18:45:07 +0530

Sub Judge

Melur